குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்,
முன்னிலை: – திருமதி. S.சர்மிளா., B.A.B.L.(HONS) L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

CMP No: 100/2026,
in
Cr.No. 75/2026
in
(ஓமலூர் காவல்நிலையம்)

2.திரு.அஜித்குமார் த/பெ.பழனி,

.....மனுதாரர்/எதிரி

//எதிர்//

காவல் உதவி ஆய்வாளர்,
ஓமலூர் காவல் நிலையம்,
குற்ற எண்.75/2026,
சட்டபிரிவுகள்.U/s.296(b),115(2),118(1),351(3) BNS.

.... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 04.03.2026–ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சிவக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், குற்ற முறையிடுபவர்/புகார்தாரர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**உத்தரவு**

இம்மனுவானது பிரிவு 480 BNSS ன் கீழ் மனுதாரரை பிணையில் விட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வழக்கின் வரலாறு சுருக்கம்:**

இவ்வழக்கின் வாதியின் பெயர் சம்பத் என்பவர் முத்துநாயக்கன்பட்டி, கலர்பட்டியில் குடும்பத்துடன் குடியிருந்து கொண்டு எலக்ட்ரிசியன் வேலை செய்து வருவதாகவும், தனக்கு ஈஸ்வரி என்ற மனைவியும், ஜெய ஸ்ரீ என்ற மகளும் இருப்பதாகவும், தனக்கும் தனது மனைவிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு கடந்த பத்து வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், தன் மனைவியும், மகளும் பள்ளிபாளையத்தில் குடியிருந்து வருவதாகவும், தன் வீட்டிற்கு பக்கத்தில் தன் பங்காளி சுப்பிரமணி என்பவர் குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும், தனக்கும் சுப்பிரமணி குடும்பத்திற்கும் நில, தடவழி சம்பந்தமாக வாய் தகராறு ஏற்பட்டு கடந்த 5 வருடகாலமாக தங்களுக்குள் முன்விரோதம் இருந்து வந்ததாகவும், தனக்கு

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.03.06 17:37:53 +0530

பிராந்தி குடிக்கும் பழக்கம் உள்ளது என்றும், தான் பிரந்தி குடித்துவிட்டு வந்து போதையில் தன்னை தன் மனைவி பிரிந்து சென்ற வருத்ததிலும், நில, தடவழி பிரச்சனை சம்மந்தமாகவும் யாதாவது கத்திக்கொண்டிருப்பதாகவும், இந்நிலையில் 07.02.2026 ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் தன் வீட்டின் முன்பு நின்று நானாக பேசிக்கொண்டிருந்தபோது சுப்பிரமணி, அவரது மனைவி வசந்தி அவரது உறவினர் அஜித்குமார் ஆகியோர்கள் என் வீட்டு முன்பு வந்து எதுக்குடா, தேவிடியா கண்டார ஓலி பையா எப்ப பார்த்தாலும் குடித்துவிட்டு வந்து தங்களை பேசுற என கெட்டவார்த்தையால் தன்னை திட்டி வாய்தகராறு செய்ததாகவும், அதில் அஜித்குமார், சுப்பிரமணி ஆகிய இருவரும் தன் அருகில் வந்து கையால் தன் உடம்பின் மீது அடித்து ரத்தகாயத்தை ஏற்படுத்தியதாகவும், வசந்தி, கீழே கிடந்த கல்லை எடுத்து வந்து தன் வலது, இடது பக்க கண் அருகில் குத்தி ரத்த காயத்தை ஏற்படுத்தி விட்டதாகவும், தான் வலி தாங்க முடியாமல் சத்தம்போட அருகில் இருந்தவர்கள் வருவதை பார்த்து கையில் வைத்திருந்த கட்டை, கம்பி, கல்லை காட்டி உன்னை என்னைக்கு இருந்தாலும், கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தாகவும், தனக்கு உதவிக்கு யாரும் இல்லாமல் வீட்டிலேயே இருந்ததாகவும், பின்னர் தனக்கு தலையில் வலி அதிகமாக இருந்ததால் 11.02.2026 ம் தேதி 108 ஆம்புலன்ஸ் மூலம் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்ததாகவும், பிறகு ஓமலூர் காவல்நிலைய குற்றவழக்கு எண்.75/2026, சட்டபிரிவு.296(b),115(2),118(1),351(3) BNS. நாள் 11.02.2026 ன் படி பதிவு செயய்யப்பட்டது.

**<u>மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர் பிரிவு.U/s.296(b),115(2),118(1),351(3) BNS. குற்றத்திற்காக 12.02.2026 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் உள்ளார் என்றும், மனுதாரர் மேற்படி குற்றத்தை செய்யவில்லை என்றும், மேற்படி குற்றம் ஆனது மரண தண்டனையோ அல்லது ஆயுள் கால தண்டனையோ விதிக்க கூடிய குற்றம் இல்லை என்றும், மேலும் மனுதாரர் மதிக்கத்தக்க குடிமகன் என்றும், அவர் மறைந்து கொள்ள மாட்டார் என்றும், நீதிமன்றம் எதிர்பார்க்கும் போதுமான பிணைகளையும், பிணை பத்திரத்தையும், எழுதி தருவதற்கு தயாராக உள்ளார் என்றும், மேலும் எதிரி 23 நாட்களாக சிறையில் இருந்து வருகிறார் என்றும், எதிரியை பிணையில் விடுவித்தால் நீதிமன்றம் விதிக்கும் எந்தவித நிபந்தனைக்கும் கட்டுப்பட தயாராக உள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

**<u>அரசு தரப்பின் பதில்</u>**

எதிர்மனுதாரர் காவல் துறை இவ்வழக்கு புலன் விசாரணை ஆரம்ப நிலையில் இருப்பதால் எதிரியை பிணையில் விட்டால் அவர் மீண்டும் இது போன்ற குற்றச்செயலில்

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2026.03.06 17:37:58 +0530

ஈடுபடுவார் என்றும், எதிரியை பிணையில் விட்டால் சாட்சிகளை கலைக்க நேரிடும் என்றும், எதிரி தலைமறைவு ஆகிவிடுவார் என்றும், மேற்கண்ட காரணங்களுக்காக மிகவும் கடுமையான ஆட்சேபனை தெரிவித்தனர்.

**தீர்வு:**

இரு தரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டது. இவ்வழக்கின் கோப்புகளை பார்க்கும் போது எதிரியானவர் 12.02.2026 அன்று பிரிவு. 296(b),115(2),118(1),351(3) BNS, குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர் இந்த குற்றத்தை செய்யவில்லை என்றும், இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கடந்த 23 நாட்களாக நீதிமன்ற காவலில் உள்ளார் என்று வாதிட்டார். மேற்படி இவ்வழக்கின் வாதி மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து வீடு திரும்பி விட்டார் என்றும், இவ்வழக்கின் எதிரி மீது முன் வழக்கு இல்லை என்றும், எதிரி தற்போது பிணையதாரர்கள் கொடுக்க தயாராக உள்ளார் என்றும், மேலும் மனுதாரர்/எதிரியை நீதிமன்ற காவலில் வைப்பது அவசியம் இல்லாதது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

அரசு தரப்பானது மனுதாரர்ரை பிணையில் விடும் பட்சத்தில் அவர் சாட்சிகளை கலைக்கக் கூடும் என்பதற்கும், தலைமறைவாகிவிடுவார் என்பதற்கும் தகுந்த திருப்திக்காரமான காரணங்களை எதுவும் தெரிவிக்கவில்லை. மேலும் உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையான **'bail is the rule and Jail is an exception'** என்பதையும் இந்த நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. இருந்த போதிலும் மனுதாரரின் பங்களிப்பை விசாரணையிலும் இந்த நீதிமன்றத்திலும் உறுதி செய்வதற்காக தகுந்த நிபந்தனைகளுடன் மனுதாரர்ரை பிணையில் விடுவது தகுந்ததாக மற்றும் சரியானதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. முடிவாக இம்மனுவானது கீழ் கண்ட நிபந்தணைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது:

1.மனுதாரர் சொந்தமாக **ரூ.10,000/–த்திற்கு** பிணைப்பத்திரமும், அதே தொகைக்கு **இரண்டு நபர்கள் பிணை பத்திரமும்** எழுதி தரவேண்டும்.

2. மனுதாரர் ஜாமீன் மனு மற்றும் பிணைபத்திரம் **குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 14–ன்** படி இருக்க வேண்டும். மேலும் பிணையதாரர்களின் புகைப்படமானது ஜாமீன் கொடுப்பதற்கு 6 மாதத்திற்குள்ளாக எடுக்கப்பட்ட புகைப்படமாக இருக்க வேண்டும்.

3. எதிரி பிணையில் இருந்து வெளியே வந்த நாள் முதல் தினமும் காலை 10.00 மணிக்கு எதிர்மனுதாரர் காவல்நியைலம் முன் ஆஜராகி 15 நாட்கள் கையொப்பம் இடவேண்டும்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.03.06 17:38:03 +0530

4. மனுதாரர் அரசு தரப்பு சாட்சியங்களை கலைக்க கூடாது என்றும்,

5. மனுதாரர் இது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட கூடாது என்றும்,

6.மனுதாரர் தலைமறைவு ஆகாமல் விசாரணைக்கு அழைக்கும் போது நீதிமன்றத்திலும் எதிர்மனுதாரர் காவல் நிலையத்திலும் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

இந்த ஆணை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் 06-ம் வெள்ளிக்கிழமை நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.03.06 17:38:08 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.